# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

# பத்தாம் வகுப்பு அறிவியல் மெல்லக் கற்போர்க்கான – வினா விடைகள்

## இரு மதிப்பெண் வினாக்கள்

**1. நிலைமம் என்பது யாது ? அதன் வகைகள் யாவை ?**

ஒவ்வொரு பொருளும் தன் மீது சமன் செய்யப்படாத புறவிசை செயல்படாத வரையில் அது ஒய்வுநிலையில் இருக்கும்.

நிலைமம் 3 வகைப்படும்,

- ஒய்வில் நிலைமம்
- இயக்கத்தில் நிலைமம்
- திசையில் நிலைமம்

**2. செயல்படும் திசை சார்ந்து விசையினை எவ்வாறு பிரிக்கலாம் ?**

செயல்படும் திசை சார்ந்து விசையினை இரு வகையாக பிரிக்கலாம். அவை,

- ஒத்த இணை விசைகள்
- மாறுபட்ட இணை விசைகள்

KPU

**3. நிறை, எடை வேறுபடுத்துக.**

| நிறை | எடை |
|---|---|
| பொருட்களில் உள்ள பருப்பொருளின் அளவு | பொருளின் மீது செயல்படும் புவியீர்ப்பு விசையின் மதிப்பு |
| அலகு கிலோகிராம் | அலகு நியூட்டன் |
| ஸ்கேலார் அளவு | வெக்டர் அளவு |

**4. இரட்டையின் திருப்புத்திறன் வரையறு.**

சுழல் விளைவினை ஏற்படுத்தும் இரட்டையின் தொகுபயன் விசை மதிப்பு இரட்டைகளின் திருப்புத்திறன் எனப்படும்.

இரட்டையின் திருப்புத்திறன் = விசையின் எண் மதிப்பு × விசைகளுக்கு இடையே உள்ள செங்குத்து தொலைவு

எ.கா.. நீர்க்குழாய் திறத்தல், மூடுதல்

Padasalai

**5. திருப்புத்திறன் தத்துவம் வரையறு.**

சமநிலையில் உள்ள பொருள் ஒன்றின் மீது சம மதிப்புள்ள விசைகள் இணையாகவோ அல்லது எதிர் இணையாகவோ செயல்பட்டால், வலஞ்சுழி திருப்புத்திறனும் இடஞ்சுழி திருப்புத்திறனும் சமமாக இருக்கும்.

வலஞ்சுழி திருப்புத்திறன் = இடஞ்சுழி திருப்புத்திறன்

**6. நியூட்டனின் இரண்டாம் விதியினைக் கூறு.**

பொருள் ஒன்றின் மீது செயல்படும் விசையானது அப்பொருளின் உந்த மாறுபாட்டு வீதத்திற்கு நேர்தகவில் அமையும். மேலும் உந்த மாறுபாடு விசையின் திசையிலேயே அமையும். F= ma

**7. விண்கலத்தில் உள்ள விண்வெளி வீரர் எவ்வாறு மிதக்கிறார் ?**

- விண்வெளி வீரர் உண்மையில் மிதப்பதில்லை.
- விண்கலம் சுற்றியக்கத் திசைவேகத்தில் நகர்ந்து கொண்டிருப்பதால் விண்வெளி வீரரும் சமவேகத்தில் நகர்கிறார்.
- அதனால் அவர் தடையின்றி விழும் நிலையிலும் எடையற்ற நிலையிலும் உள்ளார்.

**8. ஒளிவிலகல் எண் என்றால் என்ன ?**

வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகத்திற்கும், ஊடகத்தில் ஒளியின் திசைவேகத்திற்கும் உள்ள தகவு ஆகும்.

$$\mu = \frac{\sin i}{\sin r}$$



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**9. நிறப்பிரிகை வரையறு.**

வெள்ளொளிக் கற்றையானது கண்ணாடி, நீர் போன்ற ஊடகத்தில் ஒளிவிலகல் அடையும் போது அதில் உள்ள நிறங்கள் தனித்தனியாக பிரிகை அடையும் நிகழ்வு நிறப்பிரிகை எனப்படும்.

**10. ஸ்நெல் விதியைக் கூறுக.**

படுகோணத்தின் சைன் மதிப்பிற்கும், விலகு கோணத்தின் சைன் மதிப்பிற்கும் உள்ள தகவானது அவ்விரு ஊடகங்களின் ஒளிவிலகல் எண்களின் தகவிற்குச் சமம்.

$$\frac{\sin i}{\sin r} = \frac{\mu 2}{\mu 1}$$

**11. ராலே சிதறல் விதியைக் கூறு.**

ஓர் ஒளிக்கதிர் சிதறலடையும் அளவானது, அதன் அலைநீளத்தின் நான்மடிக்கு எதிர்தகவில் அமையும்.

சிதறல் அளவு $\propto \frac{1}{\lambda 4}$

**12. குவிலென்சு மற்றும் குழிலென்சு வேறுபடுத்துக.**

| குவிலென்சு | குழிலென்சு |
|---|---|
| குவிக்கும் லென்சு. | விரிக்கும் லென்சு. |
| மெய்பிம்பம் தோற்றுவிக்கும். | மாயபிம்பம் தோற்றுவிக்கும் . |
| தூரப்பார்வை குறைபாட்டை சரிசெய்யும். | கிட்டப்பார்வை குறைபாட்டை சரிசெய்யும். |

**13. வானம் ஏன் நீலநிறமாகத் தோன்றுகிறது ?**

சூரிய ஒளியானது வளிமண்டலத்தின் வழியாகச் செல்லும் போது குறைந்த அலைநீளம் உடைய நீலநிறம் அதிகமாக சிதறல் அடைகிறது. இதனால் வானம் நீலநிறமாகத் தோன்றுகிறது.

**14. போக்குவரத்துச் சைகை விளக்குகள் சிவப்பு நிறத்தில் அமைக்கப்படுவதன் காரணம் ஏன் ?**

- சிவப்பு நிறம் அதிக அலைநீளம் கொண்டது.
- குறைவான அளவே சிதறல் அடையும்.
- வளிமண்டலத்தில் அதிகத் தொலைவு பயணிக்கக்கூடியது.

**15. ஒரு கலோரி வரையறு ?**

ஒரு கிராம் நிறையுள்ள நீரின் வெப்பநிலையை 1 $°C$ உயர்த்தத் தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அளவு ஆகும்.

**16. பரும வெப்ப விரிவு குணகம் என்றால் என்ன ?**

ஓரலகு வெப்பநிலை உயர்வால் பொருளின் பருமனில் ஏற்படும் மாற்றத்திற்கும், ஓரலகு பருமனுக்கும் உள்ள தகவு. இதன் SI அலகு கெல்வின்$^{-1}$.

**17. உண்மை வெப்ப விரிவு குணகம் என்றால் என்ன ?**

ஓரலகு வெப்பநிலை உயர்வால் திரவத்தில் அதிகரிக்கும் உண்மை பருமனுக்கும், ஓரலகு பருமனுக்கும் உள்ள தகவு. இதன் SI அலகு கெல்வின்$^{-1}$.

**18. தோற்ற வெப்ப விரிவு குணகம் என்றால் என்ன ?**

ஓரலகு வெப்பநிலை உயர்வால் திரவத்தில் அதிகரிக்கும் தோற்ற பருமனுக்கும், ஓரலகு பருமனுக்கும் உள்ள தகவு. இதன் SI அலகு கெல்வின்$^{-1}$.

**19. பாயில் விதியைக் கூறுக.**

மாறா வெப்பநிலையில் ஒரு குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தம், பருமனுக்கு எதிர்தகவில் அமையும்.

$P \propto \frac{1}{V}$



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**20. பருமவிதியைக் கூறுக.**

மாறா அழுத்தத்தில் வாயுவின் பருமன், வெப்பநிலைக்கு நேர்த்தகவில் அமையும்.

$V \propto T$

**21. இயல்பு வாயு மற்றும் நல்லியல்பு வாயு – வேறுபடுத்துக.**

| இயல்பு வாயு | நல்லியல்பு வாயு |
|---|---|
| அணுக்கள் கவர்ச்சி விசையினால் இடைவினை புரியும். | அணுக்கள் இடைவினை புரியாமல் இருக்கும். |
| அணுக்களுக்கிடையே கவர்ச்சி விசை இல்லை | கவர்ச்சி விசையின் வலிமை குறைவு. |

**22. மின்னோட்டத்தின் அலகை வரையறு.**

- இதன் SI அலகு ஆம்பியர் (A).
- ஒரு கூலும் மின்னூட்டம் ஒரு விநாடி நேரத்தில் கடத்தியின் வழியாக கடந்து செல்லும்போது அக்கடத்தியில் பாயும் மின்னோட்டம் ஒரு ஆம்பியர்.

**23. மின்னிழை விளக்குகளில் டங்ஸ்டன் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மின் உருகு இழையாக அதனை பயன்படுத்துவதில்லை ஏன்?**

- டங்ஸ்டன் மிக அதிக உருகுநிலை கொண்டது.
- அதிக மின்னோட்டத்தின் போது எளிதில் உருகாது.
- மின்சுற்றும் துண்டிக்கப்படாது.
- எனவே வீட்டிலுள்ள மின்சாதனங்கள் சேதமடைந்துவிடும்.

KPU

**24. ஒரு கடத்தியின் அளவை தடிமனாக்கினால் அதன் மின் தடையின் மதிப்பு என்னவாகும்?**

குறையும். ஒரு கடத்தியின் மின்தடையானது குறுக்குவெட்டுப் பரப்பிற்கு எதிர்தகவில் அமையும்.

Padasalai

**25. மின்னோட்டத்தின் வெப்பவிளைவை பயன்படுத்தி செயல்படும் இரண்டு மின்சாதனங்களின் பெயர்கள் யாவை?**

• மின் சூடேற்றி • மின்சலவைப் பெட்டி

**26. மின்னழுத்தம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு வரையறு.**

**மின்னழுத்தம்**

ஓரலகு நேர் மின்னூட்டத்தை முடிவில்லா தொலைவில் இருந்து மின்விசைக்கு எதிராக அப்புள்ளிக்கு கொண்டுவர செய்யப்படும் வேலை ஆகும்.

**மின்னழுத்த வேறுபாடு**

ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு ஓரலகு நேர் மின்னூட்டத்தை மின் விலக்கு விசைக்கு எதிராக நகர்த்த செய்யப்படும் வேலை.

**27. வீட்டிலுள்ள மின்சுற்றில் புவித் தொடுப்புக் கம்பியின் பங்கு என்ன?**

மின்கசிவினால் உருவாகும் ஆபத்தான மின்னோட்டம் புவித் தொடுப்புக் கம்பி வழியாக புவிக்குச் செல்கிறது.

• பாதுகாப்பு அரண். • மின்னதிர்ச்சியைத் தடுக்கிறது.

**28. ஓம் விதி வரையறு.**

மாறா வெப்பநிலையில், கடத்தி ஒன்றின் வழியே பாயும் மின்னோட்டம், மின்னழுத்த வேறுபாட்டிற்கு நேர்த்தகவில் அமையும். • $V = IR$

**29. வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சுற்றில் எந்த வகை மின்சுற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன?**

- பக்க இணைப்பு மின்சுற்றுகள்
- ஒரு சுற்றில் தடை ஏற்பட்டாலும் மற்ற சுற்றுகள் பாதிக்காது.
- சமமான மின் அழுத்தம் பெறும்.

**30. மின்னோட்டத்தை எந்த கருவிகள் மூலம் அளவிட முடியும்? அதனை ஒரு மின்சுற்றில் எவ்வாறு இணைக்கப்பட வேண்டும்?**

• அம்மீட்டர் • தொடர் இணைப்பு

**31. ஜூல் வெப்ப விதி வரையறு?**

ஒரு மின்தடையில் உருவாகும் வெப்பமானது,

- மின்னோட்டத்தின் இருமடிக்கு நேர்விகிதத்திலும்
- மின்தடைக்கு நேர்விகிதத்திலும்
- மின்னோட்டம் பாயும் காலத்திற்கு நேர்தகவிலும் இருக்கும்.
- $H = I^2 R t$

**32. நெட்டலை என்றால் என்ன?**

ஒரு ஊடகத்தில் ஒலி அலை பரவும் திசையிலேயே துகள்கள் அதிர்வுற்றால் இவ்வலை நெட்டலை எனப்படும்.

**33. ஒலியானது கோடை காலங்களை விட மழைக் காலங்களில் வேகமாகப் பரவுவது ஏன்?**

- மழைக்காலங்களில் காற்றின் ஈரப்பதம் அதிகம்.
- அதனால் ஒலியின் திசைவேகமும் அதிகம்.

**34. இசையரங்கங்களின் மேற்கூரை வளைவாக இருப்பது ஏன்?**

- ஒலியானது மேற்கூரையின் அனைத்து முனைகளிலும் பட்டு கேட்குநரை தெளிவாக வந்தடைகிறது.
- வளைவான பரப்புகளில் பட்டு எதிரொலிக்கும் போது அதன் செறிவு மாறுகிறது.
- இதற்கு பல்முனை எதிரொலிப்பே காரணம்.

**35. டாப்ளர் விளைவு நடைபெற முடியாத 2 சூழல்கள் யாவை?**

- ஒலிமூலம் மற்றும் கேட்குநர் ஓய்வுநிலையில் இருக்கும் போது.
- ஒலிமூலம் மற்றும் கேட்குநர் சம இடைவெளியில் நகரும் போது.

**36. மீயொலி அதிர்வுறுதல் என்றால் என்ன?**

மீயொலி அதிர்வுறுதல் என்பது 20,000 Hz க்கும் அதிகமான அதிர்வெண் கொண்ட ஒலி அதிர்வுகள் ஆகும்.

**37. மீயொலி அதிர்வுறுதலின் பயன்கள் யாவை?**

- துணைக்கோள் ஒன்றின் தொலைவினைக் கணக்கிடலாம்.
- ரேடார் கொண்டு விமானத்தின் வேகத்தைக் கணக்கிடலாம்.
- சோனார் கருவி மூலம் நீர் மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியலாம்.

**38. எதிரொலி என்றால் என்ன?**

ஒலி அலைகள் பரப்புகளில் மோதி எதிரொலிக்கும் நிகழ்வே எதிரொலி எனப்படும்.

எ.கா. சுவர்கள், மேற்கூரைகள், மலைகள்.

**39. ஊடுருவும் திறனின் அடிப்படையில் இறங்கு வரிசையில் எழுதுக. (ஆல்பா, பீட்டா, காமா, காஸ்மிக்)**

காமா > பீட்டா > ஆல்பா > காஸ்மிக் கதிர்கள்

**40. எந்தெந்தப் பொருள்கள் கதிரியக்கப் பாதிப்பிலிருந்து நம்மைப் பாதுகாக்கும்?**

காரீயம் – காரீய கை உறை, காரீய மேல் ஆடை

**41. வரையறு. மாறுநிலை நிறை**

தொடர்வினையை நிலைநிறுத்துவதற்கு தேவையான பிளவுப் பொருள்களின் குறைந்த அளவு நிறையை மாறுநிலை நிறை ஆகும். இது சூழல், அடர்த்தி, பிளவுப் பொருளின் அளவைப் பொறுத்தது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**42. இயற்கை மற்றும் செயற்கை கதிரியக்கத்தின் பண்புகள் யாவை ?**

| இயற்கை கதிரியக்கம் | செயற்கை கதிரியக்கம் |
|---|---|
| கட்டுப்படுத்த முடியாது. | கட்டுப்படுத்த முடியும். |
| தன்னிச்சையான நிகழ்வு. | தூண்டப்பட்ட நிகழ்வு. |
| ஆல்பா, பீட்டா, காமா கதிர்கள் உமிழப்படுகிறது. | நியூட்ரான், பாசிட்ரான் துகள்கள் உமிழப்படுகிறது. |
| அணுஎண் 83 விட அதிகம் கொண்ட தனிமங்கள் | அணுஎண் 83 விட குறைவான தனிமங்கள். |

**43. வரையறு. ராண்ட்ஜன்.**

நிலையான அழுத்தம், வெப்பநிலை மற்றும் ஈரப்பத நிலையில் 1 கிலோகிராம் காற்றில் கதிரியக்கப் பொருளானது $2.58 \times 10^{-4}$ கூலும் மின்னூட்டங்களை உருவாக்கும் அளவாகும்.

**44. சாடி மற்றும் ஃபஜன்ஸின் இடம்பெயர்வு விதியைக் கூறுக.**

- கதிரியக்க தனிமம் ஒன்று ஒரு $\alpha$ துகளை உமிழும் போது அதன் நிறை எண்ணில் நான்கும், அணு எண்ணில் இரண்டும் என்ற அளவில் குறைந்து புதிய சேய் உட்கரு உருவாகும். ($_2He^4$)
- கதிரியக்க தனிமம் ஒன்று ஒரு $\beta$ துகளை உமிழும் போது அதன் நிறை எண்ணில் மாறாமலும், அணு எண்ணில் ஒன்று அதிகரித்தும் புதிய சேய் உட்கரு உருவாகும். ($_0n^1$)

**45. அணுக்கரு உலையில் உள்ள கட்டுப்படுத்தும் கழிகளின் செயல்பாடுகளைத் தருக ?**

- தொடர்வினையில் நியூட்ரான்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த
- நியூட்ரான்களை உட்கவர

**46. விண்மீன் ஆற்றல் என்றால் என்ன ?**

சூரியன் மற்றும் விண்மீன்களின் உள் அடுக்கில் அணுக்கரு இணைவு நடைபெறுவதால் அதிக அளவு ஆற்றல் உருவாகிறது.

**47. வேளாண்மைத் துறையில் கதிரியக்க ரேடியோ ஐசோடோப்புகளின் பயன்கள் 2 கூறுக.**

- P – 32 பயிர் உற்பத்தியை அதிகரிக்கப் பயன்படுகிறது.
- உற்பத்தி பொருட்கள் கெட்டுப் போகாமல் நுண்ணுயிரிகளை அழித்து பாதுகாக்கப் பயன்படுகிறது.

**48. ஒப்பு அணுநிறை – வரையறு.**

$$Ar = \frac{\text{ஒரு தனிமத்தின் ஐசோடோப்புகளின் சராசரி அணுநிறை}}{\text{ஒரு C–12ன் அணு நிறையில் 1/12 பங்கின் நிறை}}$$

- Ar என்று குறிப்பிடப்படுகிறது.
- திட்ட அணு எடை என்று அழைக்கலாம்.

**49. அணுக்கட்டு எண் – வரையறு.**

- மூலக்கூறில் உள்ள அணுக்களின் எண்ணிக்கையே ஆகும்.
- நான்கு வகைப்படும்.
- ஓரணு மூலக்கூறு, ஈரணு மூலக்கூறு. மூவணு மூலக்கூறு, பல அணு மூலக்கூறு.
- எ.கா. பாஸ்பரஸ் அணுக்கட்டு எண் ($P_4$) = 4

  HCl ன் அணுக்கட்டு எண் = 2

**50. வேறுபட்ட ஈரணு மூலக்கூறுகளுக்கு 2 எ.கா. தருக ?**

* CO * $CO_2$

**51. வாயுவின் மோலார் பருமன் என்றால் என்ன ?**

STP ல் ஒரு மோல் வாயுவானது 22.4 லிட்டர் பருமனை ஆக்கிரமிக்கும். இது மோலார் பருமன் எனப்படும்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**52. A என்பது செம்பழுப்பு உலோகம். இது $O_2$ உடன் வினையுற்று < 1370 K வெப்பநிலையில் B என்ற கருமையான சேர்மத்தை உருவாக்கும். >1370 K வெப்பநிலையில் A யானது சிவப்பு நிற C ஐ உருவாக்கும் எனில் A, B, C என்னவென்று வினைகளுடன் விளக்குக.**

A - Cu B - CuO C - $Cu_2O$

**53. A என்பது வெள்ளியின் வெண்மை கொண்ட உலோகம். A ஆனது $O_2$ உடன் 800 $^\circ C$ யில் வினைபுரிந்து B யை உருவாக்கும். A யின் உலோகக் கலவை விமானத்தின் பாகங்கள் செய்யப்பயன்படும். A மற்றும் B என்ன ?**

A - அலுமினியம் B - அலுமினியம் ஆக்சைடு

**54. துரு என்பது என்ன ? துரு உருவாகுவதன் சமன்பாட்டை தருக.**

- இரும்பானது ஈரக் காற்றுடன் வினைபுரிந்து பழுப்பு நிற நீரேறிய ஃபெர்ரிக் ஆக்சைடை உருவாக்குகின்றது.
- இது துரு எனப்படும். இந்நிகழ்வு துருப்பிடித்தல் எனப்படும்.

$4\ Fe + 3\ O_2 + H_2O \rightarrow 2\ Fe_2O_3 \cdot H_2O$

**55. இரும்பு துருப்பிடித்தலுக்கான இரு காரணங்கள் தருக.**

- ஈரமான காற்று
- நீர்
- ஆக்ஸிஜன்

**56. ஒரு உலோகம் A யின் எலக்ட்ரான் ஆற்றல் மட்டம் 2,8,18,1 ஆகும். A ஆனது ஈரக்காற்றுடன் வினைபுரிந்து B எனும் பச்சை படலத்தை உருவாக்கும். A அடர் $H_2SO_4$ உடன் வினைபுரிந்து C மற்றும் D ஐ உருவாக்கும். D யானது வாயுநிலை சேர்மம் எனில் A,B,C மற்றும் D எவை ?**

A- தாமிரம்
B- காப்பர் கார்பனேட்
C- காப்பர் சல்பேட்
D- சல்பர் டை ஆக்ஸைடு வாயு

KPU

**57. கரைசல் – வரையறு ?**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களைக் கொண்ட ஒரு படித்தான கலவை. எ.கா. கடல்நீர்.

Padasalai

**58. இருமடிக்கரைசல் என்றால் என்ன ?**

- ஒரு கரைபொருளையும், ஒரு கரைப்பானையும் கொண்ட கரைசல் இருமடிக்கரைசல் எனப்படும்.
- இரு கூறுகளைக் கொண்டது.
- நீரில் கரைந்த காப்பர் சல்பேட்.

**59. நீர்க்கரைசல் மற்றும் நீரற்ற கரைசல் என்றால் என்ன ? எ.கா. தருக.**

**நீர்க்கரைசல்**

கரைப்பொருளைக் கரைக்கும் கரைப்பானாக நீர் செயல்பட்டால் இக்கரைசல் நீர்க்கரைசல் எனப்படும். எ.கா. நீரில் கரைக்கப்பட்ட சர்க்கரை.

**நீரற்ற கரைசல்**

கரைப்பொருளைக் கரைக்கும் கரைப்பானாக நீரைத் தவிர பிற திரவங்கள் செயல்பட்டால் இக்கரைசல் நீரற்ற கரைசல் எனப்படும். எ.கா. $CS_2$ ல் கரைக்கப்பட்ட சல்பர்.

**60. கனஅளவு சதவீதம் – வரையறு.**

ஒரு கரைசலில் உள்ள கரைபொருளின் கனஅளவை சதவீதத்தில் குறித்தால் அது கனஅளவு சதவீதம் எனப்படும்.

$$\text{கன அளவு சதவீதம்} = \frac{\text{கரைபொருளின் கன அளவு}}{\text{கரைசலின் கன அளவு}} \times 100$$

**61. குளிர் பிரதேசங்களில் நீர்வாழ் உயிரினங்கள் அதிகம் வாழ்கின்றன. ஏன் ?**

- நீர்நிலைகளில் அதிக அளவு ஆக்ஸிஜன் கரைந்துள்ளது.
- வெப்பநிலை குறையும் போது ஆக்ஸிஜன் கரைதிறன் அதிகரிக்கிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**62. நீரேறிய உப்பு – வரையறு.**

- அயனிச் சேர்மங்களில் தெவிட்டிய கரைசலை உருவாக்கும் போது அவற்றின் அயனிகள் நீர் மூலக்கூறுகளை கவர்ந்து குறிப்பிட்ட வேதி விகிதத்தில் பிணைப்பினை ஏற்படுத்தும் நிகழ்வு நீரேற்றம் எனப்படும்.
- தெவிட்டிய கரைசல் படிகமாகிறது.
- நீர் மூலக்கூறுகளில் அடங்கி உள்ள படிகங்களே நீரேறிய உப்புகள் எனப்படும்.
- எ.கா. நீல விட்ரியால்

**63. ஈரம் உறிஞ்சிகள் மற்றும் ஈரம் உறிஞ்சிக் கரைபவைகளை அடையாளம் காண்க.**

| ஈரம் உறிஞ்சிகள் | ஈரம் உறிஞ்சிக் கரைபவைகள் |
|---|---|
| அடர் சல்பியூரிக் அமிலம்<br>சிலிக்கா ஜெல்<br>அசி | காப்பர் சல்பேட் பென்டாஹைட்ரேட்<br>கால்சியம் குளோரைடு<br>எப்சம் உப்பு காகாள |

**64. தெவிட்டிய கரைசல்– குறிப்பு வரைக.**

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் எந்த ஒரு கரைசலில் மேலும் கரைப்பொருளைக் கரைக்க இயலாதோ, அக்கரைசல் தெவிட்டிய கரைசல் எனப்படும்.
எ.கா. 25 வெப்பநிலையில் 100கி நீரில் 36 கி சோடியம் குளோரைடு உப்பு கரைத்தல்.

**65. தெவிட்டாத கரைசல் – குறிப்பு வரைக.**

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் தெவிட்டிய கரைசலை விட குறைவான அளவு கரைபொருள் கரைந்த கரைசல் தெவிட்டாத கரைசல் எனப்படும்.
எ.கா. 25 வெப்பநிலையில் 100கி நீரில் 16 கி சோடியம் குளோரைடு உப்பு கரைத்தல்.

**66. கரைதிறன் – வரையறு.**

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில் 100 கி கரைப்பானில் தெவிட்டிய கரைசலை உருவாக்க தேவையான கரைபொருளின் கிராம்களின் எண்ணிக்கை அதன் கரைதிறன் எனப்படும்.

$$\text{கரை திறன்} = \frac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைப்பானின் நிறை}} \times 100$$

**67. பொட்டாசியம் குளோரைடு நீர்க்கரைசலை சில்வர் நைட்ரேட் நீர்க்கரைசலுடன் சேர்க்கும் போது வெண்மை நிற வீழ்படிவு உண்டாகிறது. இவ்வினையின் வேதிச் சமன்பாட்டைத் தருக.**

$$KCl + AgNO_3 \rightarrow AgCl \downarrow + KNO_3$$

**68. வெப்பநிலை உயர்த்தும் போது ஒரு வினையின் வேகம் அதிகரிக்கிறது. ஏன் ?**

வினைபடுபொருள்களின் பிணைப்புகள் எளிதில் உடைந்து வினையின் வேகம் அதிகரிக்கிறது.

**69. சேர்க்கை அல்லது கூடுகை வினை வரையறு. வெப்ப உமிழ் வினைக்கு எ.கா. தருக.**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வினைபடு பொருள்கள் இணைந்து ஒரு சேர்மம் உருவாகும் வினை கூடுகை வினை எனப்படும்.
- எ.கா. ஹைட்ரஜன் வாயு, குளோரின் வாயு உடன் இணைந்து ஹைட்ரஜன் குளோரைடு வாயு வருகிறது.


$$H_2 + Cl_2 \rightarrow 2HCl$$

**70. மீள் வினை மற்றும் மீளா வினைகளை வேறுபடுத்துக.**

| மீள் வினை | மீளா வினை |
|---|---|
| • முன்னோக்கு வினை, பின்னோக்கு வினை நடைபெறும். | • முன்னோக்கு வினை மட்டும் நடைபெறும். |
| • வினை சமநிலை அடையும். | • வினை சமநிலை அடையாது. |
| • வினை மெதுவாக நடைபெறும். | • வினை வேகமாக நடைபெறும். |

**71. எளிய கீட்டோனின் பெயரையும் மூலக்கூறு வாய்ப்பாட்டையும் எழுதுக.**

அசிட்டோன்



$(CH_3COCH_3)$




Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com


**72. எத்தனாயிக் அமிலம் எத்தனாலில் இருந்து எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ? இவ்வினைக்கான சமன்பாட்டை எழுதுக ?**


எத்தனாலை காரம் கலந்த பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு ஆக்ஸிஜனேற்றம் அடையச் செய்து தயாரிக்கலாம்.

$$\underset{\text{எத்தனால்}}{CH_3CH_2OH} \xrightarrow[2[O]]{KMnO_4/OH^-} \underset{\text{எத்தனாயிக் அமிலம்}}{CH_3COOH} + H_2O$$

**73. கீழ்க்கண்ட சேர்மங்களின் கார்பன் சங்கிலித் தொடரைப் பொறுத்து வகைப்படுத்துக மற்றும் மூலக்கூறு வாய்பாட்டை எழுதுக.**

- வளையமற்ற சேர்மங்கள் — புரப்பேன் — $CH_3 - CH_2 - CH_3$
- வளையச் சேர்மங்கள் — பென்சீன் 

வளைய பியூட்டேன் 

பியூரான் 

**74. சோப்பு மற்றும் டிடர்ஜெண்ட் வேறுபடுத்துக.**

| சோப்பு | டிடர்ஜெண்ட் |
|---|---|
| கார்பாக்சலிக் அமில சோடியம் உப்புகள். | சல்போனிக் அமில சோடியம் உப்புகள். |
| கடின நீரில் பயன்படுத்த முடியாது. | கடின நீரில் பயன்படுத்த முடியும். |
| உயிரிய சிதைவு அடையும். | உயிரிய சிதைவு அடையாது. |
| கடின நீருடன் ஸ்கம் உருவாக்கும். | கடின நீருடன் ஸ்கம் உருவாக்காது. |

**75. இருவித்திலைத் தாவரத் தண்டின் வாஸ்குலார் கற்றையின் அமைப்பைப் பற்றி எழுதுக.**

- ஒன்றிணைந்தவை, ஒருங்கமைந்தவை, திறந்தவை மற்றும் உள்நோக்கு சைலம் கொண்டவை.
- இது பித்தைச் சுற்றி ஒரு வளையமாக அமைந்துள்ளது.

**76. இலையிடைத்திசு (மீசோபில்) பற்றி குறிப்பு வரைக ?**

- இருவித்திலைத் தாவர இலையில் மேற்புறத் தோலுக்கும் கீழ்ப்புறத் தோலுக்கும் இடையே காணப்படும் தளத்திசு ஆகும்.
- இருவகை செல்கள் உள்ளன. அவை
  - பாலிசேட் பாரன்கைமா
  - ஸ்பாஞ்சி பாரன்கைமா

**77. மலரும் தாவரங்களில் காணப்படும் மூன்று வகையான திசுத் தொகுப்புகளைக் குறிப்பிடுக.**

- தோல் திசுத்தொகுப்பு
- தளத் திசுத்தொகுப்பு
- வாஸ்குலார் திசுத்தொகுப்பு

KPU

**78. ஒளிச்சேர்க்கை என்றால் என்ன ? இது செல்லில் எங்கு நடைபெறுகிறது ?**

- தற்சார்பு ஊட்ட உயிரிகள் சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி தமக்கு வேண்டிய உணவைத் தாமே தயாரித்துக் கொள்ளும் நிகழ்ச்சி ஆகும்.
- இது பசுங்கணிகத்தின் உள்ளே நடைபெறுகிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**79. ஒளிச்சேர்க்கையின் போது இருள்வினைக்கு முன்பு ஏன் ஒளிவினை நடைபெற வேண்டும் ?**

- ஒளிவினையின் போது ஒளிச்சேர்க்கை நிறமிகள் சூரிய ஆற்றலை ஈர்த்து ATP மற்றும் $NADPH_2$ வை உருவாக்கும்
- இருள்வினையின் போது ATP மற்றும் $NADPH_2$ உதவியுடன் $CO_2$ ஆனது கார்போஹைட்ரேட்டாக ஒடுக்கமடைகிறது.
- எனவே இருள்வினைக்கு முன்பு ஒளிவினை நடைபெற வேண்டும்.

**80. ஒளிச்சேர்க்கையின் ஒட்டுமொத்த சமன்பாட்டை எழுதுக.**

$$6CO_2 + 12H_2O \xrightarrow[\text{குளோரோபில்}]{\text{சூரியஒளி}} C_6H_{12}O_6 + 6\,H_2O + 6O_2$$

கார்பன் டை ஆக்சைடு + நீர் ⟶ குளுக்கோஸ் + நீர் + ஆக்ஸிஜன்

**81. சுவாச ஈவு என்றால் என்ன ?**

சுவாசித்தலின் போது வெளியேற்றப்பட்ட $CO_2$ அளவிற்கும், எடுத்துக்கொள்ளப்பட்ட $O_2$ அளவிற்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{சுவாச ஈவு} = \frac{\text{வெளியிடப்படும் } CO_2 \text{ அளவு}}{\text{எடுத்துக்கொள்ளப்படும் } O_2 \text{ அளவு}}$$

**82. முயலில் டையாஸ்டீமா எவ்வாறு உருவாகின்றது ?**

- முயலுக்கு கோரைப்பற்கள் கிடையாது.
- வெட்டும் பற்களுக்கும் முன் கடைவாய்ப் பற்களுக்கும் இடையே உள்ள இடைவெளி டையாஸ்டீமா எனப்படும்.

**83. முயலின் பல்லமைப்பு ஏன் ஹெட்டிரோடான்ட் (வேறுபட்ட அல்லது மாறுபட்ட) பல்லமைப்பு எனப்படுகிறது ?**

- வெவ்வேறு வகையான பற்களைக் கொண்டது.
- இத்தகைய பல்லமைப்புக்கு மாறுபட்ட பல்லமைப்பு என்று பெயர்.

**84. அட்டை ஓம்புயிரியின் உடலிலிருந்து எவ்வாறு இரத்தத்தை உறிஞ்சுகிறது ?**

- அட்டையின் வாயினுள் உள்ள மூன்று தாடைகள் உடலில் வலியில்லாத Y வடிவ காயத்தை ஏற்படுத்தும்.
- தசையாலான தொண்டை இரத்தத்தை உறிஞ்சுகிறது.
- ஹிருடின் என்ற பொருள் இரத்தத்தை உறையவிடுவதில்லை.

**85. முயலின் சுவாசக் குழாயில் குருத்தெலும்பு வளையங்கள் காணப்படுவது ஏன் ?**

மூச்சுக்குழாயின் வழியாக காற்று எளிதாகச் சென்றுவரும் வகையில் அமைந்துள்ளது.

**86. அட்டையில் காணப்படும் இடப்பெயர்ச்சி நிகழ்ச்சியின் படிநிலைகளை எழுதுக.**

- ஊர்தல் முறை – தசைகளின் சுருக்கம் மற்றும் நீள்தல் மூலம் இடப்பெயர்ச்சி
- நீந்துதல் முறை – நீரில் நீந்தி அலை இயக்கம் மூலம் இடப்பெயர்ச்சி

**87. அட்டையில் காணப்படும் ஒட்டுண்ணி தகவமைப்புகளை எழுதுக.**

- தொண்டை இரத்தத்தை உறிஞ்சப் பயன்படுகிறது.
- தீனிப்பை இரத்தம் சேமிக்கப் பயன்படுகிறது.
- மூன்று தாடைகள் உடலில் வலியில்லாத Y வடிவ காயத்தை ஏற்படுத்தும்.
- ஹிருடின் என்ற பொருள் இரத்தத்தை உறையவிடுவதில்லை.
- ஒட்டுறிஞ்சிகள் கவ்வும் உறுப்பாக செயல்படுகிறது.

**88. இரத்தம் சிவப்பு நிறமாக இருப்பது ஏன் ?**

சுவாச நிறமியான ஹீமோகுளோபினைக் கொண்டுள்ளதால் இரத்தம் சிவப்பு நிறமாக காணப்படுகிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**89. நீராவிப்போக்கின்போது இலைத்துளை திறப்பதற்கும் மூடிக்கொள்வதற்குமான காரணத்தைக் கூறுக.**

- காப்பு செல்களின் விறைப்பழுத்த மாறுபாடுகளால் நடைபெறுகிறது.
- பகலில் காப்பு செல்களுக்குள் நீர் புகுவதால் விறைப்புத் தன்மை அடைந்து இலைத்துளை திறந்து கொள்கிறது.
- இரவில் காப்பு செல்களை விட்டு நீர் வெளியேறுவதால் விறைப்புத் தன்மை குறைந்து இலைத்துளை மூடிக் கொள்கிறது.

**90. கூட்டிணைவு என்றால் என்ன ?**

நீர் மூலக்கூறுகளுக்கு இடையே உள்ள ஈர்ப்பு விசை கூட்டிணைவு எனப்படும்.

**91. வேரினுள் நீர் நுழைந்து இலையின் மூலம் நீராவியாக வளிமண்டலத்தில் இழக்கப்படும் பாதையைக் காட்டுக.**

வேரழுத்தம் →நுண்துளை ஈர்ப்பு விசை → நீர் மூலக்கூறுகளின் கூட்டிணைவு → ஒட்டிணைவு → நீராவிப்போக்கின் இழுவிசை → நீராவிப்போக்கு

**92. மனிதர்களின் சுற்றோட்டமானது இரட்டைச் சுற்றோட்டம் என அழைக்கப்படுவது ஏன் ?**

- ஒரு முழு சுழற்சியின் போது இரத்தமானது இதயத்தின் வழியாக இருமுறை சுற்றி வருவதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது.
- இந்நிகழ்வில் ஆக்ஸிஜன் மிகுந்த இரத்தமும், ஆக்ஸிஜன் குறைந்த இரத்தமும் ஒன்றுடன் ஒன்று கலப்பதில்லை.

**93. இதய ஒலிகள் என்றால் என்ன ? அவை எவ்வாறு உருவாகின்றன ?**

- இதய வால்வுகள் சீரான முறையில் திறந்து மூடுவதால் ஏற்படுகிறது.
- மூவிதழ் மற்றும் ஈரிதழ் வால்வுகள் மூடுவதால் 'லப்' என்ற ஒலி நீண்ட நேரத்திற்கு ஒலிக்கும்.
- அரைச்சந்திர வால்வு மூடுவதால் 'டப்' என்ற ஒலி குறுகிய நேரத்திற்கு ஒலிக்கும்.

**94. இதய வால்வுகளின் முக்கியத்துவம் என்ன ?**

- இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது.
- இரத்தம் ஒரே திசையில் செல்லவும், பின்னோக்கி வருவதை தடுக்கவும் உதவுகிறது.

**95. Rh காரணியைக் கண்டறிந்தவர் யார் ? அது என் அவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

- 1940 ல் லேண்ட்ஸ்டீனர் மற்றும் வீனர்.
- ரீசஸ்குரங்கின் பெயரிலிருந்து பெறப்பட்டதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது.

**96. தமனிக்கும் சிரைக்கும் உள்ள வேறுபாடு யாது ?**

| தமனி | சிரை |
|---|---|
| வழங்கும் குழாய்கள். | பெறும் குழாய்கள். |
| இளஞ்சிவப்பு நிறம் உடையது. | சிவப்பு நிறம் உடையது. |
| உடலின் ஆழ்பகுதியில் உள்ளது. | உடலின் மேற்பகுதியில் உள்ளது. |
| தமனியின் சுவர் வலிமையானது, மீளும் தன்மை உடையது. | சிரையின் சுவர் வலிமை குறைந்தது, மீளும் தன்மை அற்றது. |

**97. வலது ஆரிக்கிள் சுவரை விட வலது வெண்ட்ரிக்கிள் சுவர் தடிமனாக உள்ளது ஏன் ?**

இதயத்திலிருந்து அதிக விசையுடன் இரத்தத்தை உந்தி செலுத்துவதால் வலது, இடது வெண்ட்ரிக்கிள் சுவர் தடித்து உள்ளது.

**98. சைனோ ஆரிக்குலார்( SA) கணு 'பேஸ் மேக்கர்' என்று ஏன் அழைக்கப்படுகிறது ?**

- SA கணுவானது இதயத்துடிப்புகளுக்கான மின்தூண்டலை தோற்றுவித்து இதயத் தசைகளின் சுருக்கத்தைத் தூண்டுகிறது.
- SA கணுவிலிருந்து மின்தூண்டல் அலைகள் AV கணுவிற்கு பரவுகிறது.
- AV கற்றை வெண்ட்ரிக்கிள்களுக்கு மின்தூண்டல் அலைகள் பரவி அவற்றை சுருங்கச் செய்கிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**99. உடல் இரத்த ஓட்டம் மற்றும் நுரையீரல் இரத்த ஓட்டம் வேறுபடுத்துக.**

| உடல் இரத்த ஓட்டம் | நுரையீரல் இரத்த ஓட்டம் |
|---|---|
| இடது வெண்ட்ரிக்கிள் இருந்து துவங்குகிறது. | வலது வெண்ட்ரிக்கிள் இருந்து துவங்குகிறது. |
| ஆக்ஸிஜன் மிகுந்த இரத்தம் பெருந்தமனி மூலம் உடலின் உறுப்புகளுக்கு எடுத்துச் செல்கிறது. | ஆக்ஸிஜன் குறைந்த இரத்தம் நுரையீரல் தமனி மூலம் நுரையீரலுக்கு எடுத்துச் செல்கிறது. |
| ஆக்ஸிஜன் குறைந்த இரத்தம் வலது ஏட்ரியத்திற்கு வருகிறது. | ஆக்ஸிஜன் பெற்ற இரத்தம் இடது ஏட்ரியத்திற்கு வருகிறது. |

**100.சிஸ்டோல் மற்றும் டையஸ்டோல் வேறுபடுத்துக.**

| சிஸ்டோல் | டையஸ்டோல் |
|---|---|
| இதயத்தின் ஆரிக்கிள்கள் மற்றும் வெண்ட்ரிக்கிள்கள் சுருங்கும் நிலைக்கு சிஸ்டோல் என்று பெயர். | இதயத்தின் ஆரிக்கிள்கள் மற்றும் வெண்ட்ரிக்கிள்கள் விரியும் நிலைக்கு டையஸ்டோல் என்று பெயர். |
| ஓய்வு நிலையில் சிஸ்டோல் அழுத்தம் 120 mm Hg ஆகும். | ஓய்வு நிலையில் டையஸ்டோல் அழுத்தம் 80 mm Hg ஆகும். |

**101. தூண்டல் என்பதை வரையறு ?**

- புறச்சூழலில் ஏற்படும் மாற்றம் ஆகும்.
- இவற்றை உணர உணர் உறுப்புகள் உள்ளன.

**102.பின்மூளையின் பாகங்கள் யாவை ?**

- சிறுமூளை
- பான்ஸ்
- முகுளம்

**103.மூளையைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் உறுப்புகள் யாவை ?**

- மூளையானது 3 பாதுகாப்பு உறைகளால் ஆனது. அவை மூளை உறைகள் எனப்படும்.
  - டியூராமேட்டர்
  - அரக்னாய்டு உறை
  - பையாமேட்டர்

**104.கட்டுப்படுத்தப்பட்ட அனிச்சைச் செயலக்கு எ.கா. தருக.**

ஹார்மோனியம் வாசிக்கும் போது இசைக் குறிப்புக்கு ஏற்ப அழுத்துவதும், விடுவிப்பதும் ஆகும்.

**105. நரம்பு மண்டலத்திற்கும், நாளமில்லா சுரப்பி மண்டலத்திற்கும் இடையே இணைப்பாகச் செயல்படும் உறுப்பு எது ?**

- ஹைபோதலாமஸ்.
- பிட்யூட்டரி சுரப்பியின் முன் கதப்பு ஹார்மோனைக் கட்டுபடுத்துகிறது.

**106.அனிச்சைவில் என்பதை வரையறு ?**

நரம்பு செல்களுக்கிடையே உள்ள ஒருங்கிணைந்த தூண்டல் துலங்கல்களே அனிச்சைவில் எனப்படும்.

**107.வேறுபடுத்துக– இச்சைச் செயல் மற்றும் அனிச்சைச் செயல்**

| இச்சைச் செயல் | அனிச்சைச் செயல் |
|---|---|
| நமது கட்டுபாட்டின் கீழ் நடக்கும் செயல். | தன்னிச்சையாக நடக்கும் செயல். |
| பெருமூளைப் புறணி கட்டுப்படுத்தப்படுகிறது. | தண்டுவடத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது. |



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**108.வேறுபடுத்துக– மையலின் உறை உள்ள மற்றும் மையலின் உறை அற்ற நரம்பு நாரிழைகள்.**

| மையலின்உறை உள்ள | மையலின் உறை அற்ற |
|---|---|
| ஆக்சான் மீது மையலின்உறை போர்த்தப்பட்டு இருக்கும். | ஆக்சான் மீது மையலின்உறை போர்த்தப்படாமல் இருக்கும். |
| மூளையின் வெண்மைநிறப் பகுதியில் காணப்படும். | மூளையின் சாம்பல்நிறப் பகுதியில் காணப்படும். |

**109.செயற்கை ஆக்சின்கள் என்பவை யாவை ? எ.கா. தருக.**

- செயற்கையாகத் தயாரிக்கப்படும் ஆக்சின்கள் செயற்கை ஆக்சின்கள் எனப்படும். எ.கா. 2, 4 D

**110. போல்டிங் என்றால் என்ன ? அதை எப்படி செயற்கையாக ஊக்குவிக்கலாம் ?**

- திடீரென தண்டு நீட்சியடைவதும், மலர்வதும் போல்டிங் எனப்படும்.
- ஜிப்ரல்லின்களைத் தெளித்து செயற்கையாக ஊக்குவிக்கலாம்.

**111. அப்சிசிக் அமிலத்தின் ஏதேனும் இரண்டு வாழ்வியல் விளைவுகளைத் தருக.**

- வறட்சிக் காலங்களில் இலைதுளையை மூடச்செய்கிறது.
- உதிர்தல் (இலைகள், மலர்கள், கனிகள்) நிகழ்வை ஊக்குவிக்கிறது.

**112. வேதியியல் தூதுவர்கள் என்பவை யாவை ?**

ஹார்மோன்களே வேதியியல் தூதுவர்கள் ஆகும். இவைகள் சுரப்பி மண்டலம் மூலம் சுரக்கப்படுகிறது. எ.கா. வளர்ச்சி ஹார்மோன்.

**113. நாளமுள்ளச் சுரப்பிக்கும், நாளமில்லா சுரப்பிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

| நாளமுள்ளச் சுரப்பி | நாளமில்லா சுரப்பி |
|---|---|
| நாளங்கள் காணப்படும். | நாளங்கள் காணப்படுவதில்லை. |
| நாளங்கள் வழியாகச் செல்கின்றன. | இரத்தத்தில் நேரடியாக பரவுகின்றன. |
| சுரப்புகள் – உமிழ்நீர், வியர்வை | சுரப்புகள் – ஹார்மோன்கள் |
| எ.கா. உமிழ்நீர் சுரப்பிகள், வியர்வை சுரப்பிகள். | எ.கா. தைமஸ் சுரப்பி, தைராய்டு சுரப்பி |

**114. பாராதார்மோனின் பணிகள் யாவை ?**

- மனித உடலில் கால்சியம், பாஸ்பரஸ் வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குபடுத்துகிறது.
- இரத்தத்தில் கால்சியல் அளவை பராமரிக்கிறது.

**115. பிட்யூட்டரி சுரப்பியின் பின் கதுப்பில் சுரக்கும் ஹார்மோன்கள் யாவை ? அவை எந்த திசுக்களின் மேல் செயல்படுகிறது ?**

| ஹார்மோன்கள் | செயல்படும் திசுக்கள் |
|---|---|
| வாசோபிரஸ்ஸின் | சிறுநீரகக் குழல்கள் |
| ஆக்ஸிடோசின் | கருப்பை, தாய்பாலை வெளியேற்ற காரணமாகிறது. |

**116. தைராய்டு ஹார்மோன்கள் ஏன் 'ஆளுமை ஹார்மோன்கள்' என்று அழைக்கப்படுகிறது ?**

- உடல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது.
- எலும்புகள் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- ஆளுமை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**117. வாயுநிலையில் உள்ள தாவர ஹார்மோன் எது ? தாவரங்களில் அதன் மூன்று செயல்பாடுகளை எழுதுக.**

- வாயுநிலையில் உள்ள தாவர ஹார்மோன் – எத்திலின்

**எத்திலின் செயல்பாடுகள்**

- கனிகள் பழுப்பதை ஊக்குவிக்கிறது. எ.கா. தக்காளி.
- தண்டு நீட்சி அடைவதை தடைசெய்கிறது.
- இலைகள் பழுப்பதை விரைவுப்படுத்துகிறது.

**118. தாவரங்களின் இறுக்க நிலை ஹார்மோன் என்று அழைக்கப்படுவது எது ? ஏன் ?**

இறுக்க நிலை ஹார்மோன் – அப்சிசிக் அமிலம்.
காரணம் – தாவரங்களின் சகிப்புத்தன்மையை அதிகரிக்கிறது.

**119. ஈஸ்ட்ரோஜன்கள் எங்கு உற்பத்தியாகின்றன ? மனித உடலில் இவற்றின் பணிகள் யாவை ?**

கிராபியன் செல்களில் உற்பத்தியாகின்றன.

**பணிகள்**

- பருவமடைதலின் உடல் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.
- அண்டசெல் உருவாக்கத்தைத் தூண்டுகிறது.
- பாலிக்கிள் செல்கள் முதிர்வடைவதைத் தூண்டுகிறது.
- இரண்டாம் நிலை பால் பண்புகளை ஊக்குவிக்கிறது.

**120.பிளனேரியாவைத் துண்டு துண்டாக வெட்டினால் என்ன நிகழும் ?**

இழப்பு மீட்டல் முறையில் புதிய உயிரினம் தோற்றுவிக்கும்.

**121. மூவிணைவு வரையறு ?**

இரட்டை கருவுறுதலின் போது ஓர் ஆண்இனச்செல் அண்டத்துடன் இரட்டைமய சைகோட்டையும், மற்றொரு ஆண் இனச்செல் இரட்டைமய உட்கருவுடன் முதன்மைக் கருவூணை தோற்றுவிக்கிறது. இது மும்மய உட்கரு ஆகும். இதற்கு பெயர் மூவிணைவு எனப்படும்.

**122.பூச்சிகள் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் மலரின் பண்புகள் யாவை ?**

- பூச்சிகளை கவர மலர்களில் பல நிறம், மணம், தேன் சுரக்கும் தன்மை.
- மகரந்ததத்தூள்கள் பெரியதாகவும், வெளிப்பக்கத்தில் முட்களுடனும் காணப்படும்.

**123.ஆண்களில் இரண்டாம் நிலை இனப்பெருக்க உறுப்புகளைக் கூறுக ?**

- விந்துக்குழல்
- விந்துப்பை
- ஆண்குறி
- எபிடிடைமிஸ்

**124.தாயின்கருப்பையில் வளர்கின்ற கருவானது எவ்வாறு ஊட்டம் பெறுகிறது ?**

- தாய் சேய் இணைப்புத் திசு மூலம் ஊட்டம் பெறுகிறது.
- தாய் சேய் இணைப்புத் திசு, இரத்த நாளங்கள் இணைந்தது தொப்புள் கொடி என்றழைக்கப்படுகிறது.

**125.விந்தகம் மனிதனின் வயிற்றுக்குழிக்கு வெளிப்புறத்தில் அமைந்திருப்பதன் காரணம் என்ன ? அவற்றைக் கொண்டிருக்கும் பையின் பெயரென்ன ?**

- விந்து செல் உருவாக்கத்திற்கு உடல் வெப்பநிலையை விடக் குறைந்த வெப்பநிலை தேவை.
- விந்தகத்தின் பை போன்ற அமைப்பு விதைப்பை ஆகும்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**126.மெண்டல் தன் ஆய்விற்கு ஏன் தோட்டப்பட்டாணிச் செடியைத் தேர்ந்தெடுத்தார் ?**

- அயல் மகரந்தச் சேர்க்கை செய்வது எளிது.
- பல வேறுபட்ட பண்புகளைக் கொண்டது.
- மலர்கள் இருபால் தன்மைக் கொண்டது.
- தன் மகரந்தச் சேர்க்கையால் தூய தாவரங்களைப் பெருக்கம் செய்வது எளிது.

**127.பீனோடைப், ஜீனோடைப் பற்றி நீவிர் அறிவது என்ன ?**

பீனோடைப் – ஒரு குறிப்பிட்ட பண்பின் வெளித்தோற்றம்.
ஜீனோடைப் – தாவரங்களின் ஜீனாக்கம்.

**128.அல்லோசோம்கள் என்றால் என்ன ?**

- மனிதனின் 23வது ஜோடி குரோமோசோம் அல்லோசோம்கள் எனப்படும்.
- ஓர் உயிரியின் பாலினத்தை நிர்ணயிக்கும் குரோமோசோம்கள்.
- இவை பால்குரோமோசோம்கள் எனப்படும்.

**129.ஒகசாகி துண்டுகள் என்றால் என்ன ?**

- டி.என்.ஏ இரட்டிப்பாதல் நிகழ்வில் பின் தங்கிய இழையின் சிறிய பகுதிகள் ஒகசாகி துண்டுகள் எனப்படும்.
- இவை டி.என்.ஏ லிகேஸ் தொதியால் ஒன்றிணைக்கப்படுகின்றன.

**130.ஆர்க்கியாப்டெரிக்ஸ் இணைப்பு உயிரியாக ஏன் கருதப்படுகிறது ?**

- பறவைகளைப் போல இறகுகள்.
- ஊர்வன போல் நீண்ட வால்.
- நகங்களை உடைய விரல்கள்.
- கூம்பு வடிவப் பற்களை பெற்றுள்ளன.

**131. வட்டார இனத் தாவரவியல் என்பதை வரையறுத்து அதன் முக்கியத்துவத்தை எழுதுக.**

- ஒரு பகுதியில் உள்ள தாவரங்கள் அப்பகுதி மக்களுக்கு வழிவழியாக எவ்வாறு பயன்படுகிறது என்பது பற்றி அறிவது ஆகும்.

**முக்கியத்துவம்**

- பரம்பரை பரம்பரையாகத் தாவரங்களின் பயன்களை அறிய முடிகிறது.
- நமக்கு தெரிந்த மற்றும் தெரியாத தாவரங்களின் பயன்களை அறிய முடிகிறது.

**132.கிவி பறவையின் சிதைவடைந்த இறக்கைகள் ஒரு பெறப்பட்ட பண்பு. ஏன் அது பெறப்பட்ட பண்பு என அழைக்கப்படுகிறது ?**

- இது பெறப்பட்ட பண்பு அல்ல.
- லாமார்க்கின் கூற்றுப்படி, கிவி பறவையின் சிதைவடைந்த இறக்கையை பயன்படுத்தாமல் இருந்தமைக்கான எடுத்துக்காட்டு.
- ஒரு உறுப்பை நீண்ட காலத்திற்கு பயன்படுத்தாமல் இருந்தால் குன்றல் அடைகிறது.

**133.புதை உயிரிப் படிவங்களின் காலத்தை எவ்வாறு அறிந்து கொள்ள இயலும் ?**

- கதிரியக்கத் தனிமங்களைக் கொண்டு கண்டறியலாம். எ.கா. கார்பன், யுரோனியம்.
- இறந்த தாவர, விலங்குகள் கார்பனை உட்கொள்வதில்லை.
- இறந்த பின் அவற்றிலுள்ள கார்பன் அழியத் தொடங்குகிறது.
- கார்பன் ($C_{14}$) அளவைக் கொண்டு புதை உயிர் படிவங்களின் காலத்தை அறியலாம்.

**134.மரபுப் பொறியியல் – வரையறு ?**

ஜீன்களை நாம் விரும்பியபடி கையாள்வதும், புதிய உயிர்களை உருவாக்க ஜீன்களை ஒரு உயிரியிலிருந்து மற்றொரு உயிரிக்கு இடம் மாற்றுதலும் மரபுப் பொறியியல் எனப்படும்.

**135.குருத்தணுக்களின் வகைகள் யாவை ?**

- கருநிலைக் குருத்தணுக்கள்
- முதிர் குருத்தணுக்கள்



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**136. அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் என்றால் என்ன ?**

- மரபுப் பொறியியலில் புதிதாக உள் நுழைக்கப்படும் ஜீன் 'அயல் ஜீன்' எனப்படும்.
- புதிய ஜீனைப் பெற்ற உயிரினங்கள் 'அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள்' எனப்படும்.

**137. நோய் எதிர்ப்புத் திறனுக்கான பயர் பெருக்கம் பற்றி விவரி ?**

- பூஞ்சை மற்றும் பாக்டீரியா கொல்லிகளை குறைவாகப் பயன்படுத்தி , நோய் எதிர்ப்புத் திறன் பெற்ற பயிர் வகைகளை அதிக மகசூலில் உற்பத்தி செய்வது அவசியமாகிறது.
- எ.கா. ஹிம்கிரி கோதுமை, பட்டைத் துரு நோய்.

**138. இந்தியா உணவு உற்பத்தியில் சாதிக்க உதவிய கோதுமையின் மூன்று மேம்பாடு அடைந்த பண்புகளை எழுதுக.**

- புரதம் நிறைந்த கோதுமை – **அட்லஸ் 66**
- அதிக நார்ச்சத்து, புரதச்சத்து நிறைந்த கோதுமை – **டிரிட்டிகேல்.**
- செயற்கை உரத்தை ஏற்றுக்கொள்ளும் கோதுமை – **சோனாலிகா.**

**139. லைசின் அமினோ அமிலம் நிறைந்த இரண்டு மக்காசோன கலப்புயிரி வகைகளின் பெயரை எழுதுக.**

- புரோட்டினா
- சக்தி

**140. வேறுபடுத்துக –உடல செல் ஜீன் சிகிச்சை மற்றும் இனச்செல் ஜீன் சிகிச்சை.**

| உடல செல் ஜீன் சிகிச்சை | இனச்செல் ஜீன் சிகிச்சை |
|---|---|
| உடல செல்களில் திருத்தப்பட்ட ஜீன்களை இடம் மாற்றுதல் | இன செல்களில் திருத்தப்பட்ட ஜீன்களை இடம் மாற்றுதல். |

**141. வேறுபடுத்துக – மாறுபாடு அடையாத செல்கள் மற்றும் மாறுபட்ட செல்கள்**

| மாறுபாடு அடையாத செல்கள் | மாறுபட்ட செல்கள் |
|---|---|
| குருத்தணுக்கள் பல செல் வகைகளாக மாறுபாடு அடையும் தன்மைக் கொண்டது. | நமது உடலில் காணப்படும் சிறப்பான செல் வகைகள் ஆகும். |
| எ.கா. தொப்புள்கொடி | எ.கா.கணைய செல்கள் |

**142. DNA விரல் ரேகைத் தொழில்நுட்பத்தின் நடைமுறைப் பயன்பாடுகளை எழுதுக.**

- தடயவியல் பன்பாடுகளில் குற்றவாளியை அடையாளம் காண பயன்படுகிறது.
- ஒரு குழந்தையின் தந்தையை அடையாளம் காண பயன்படுகிறது.
- மரபியல் வேறுபாடுகள், பரிணாமம் அறிய உதவுகிறது.

**143. குருத்தணுக்கள் எவ்வாறு புதுப்பித்தல் செயல்பாட்டிற்கு பயன்படுகிறது ?**

- ஜீன் கோளாறு, நோய் அல்லது விபத்தினால் சேதமடைந்த உடலின் செல்கள், திசுக்கள், உறுப்புகளின் குறைபாட்டை சரிசெய்ய குருத்தணு சிகிச்சை பயன்படும்.
- அல்சீமர் நோய் என்ற நரம்பு சிதைவு குறைபாட்டை இந்த சிகிச்சை முறையில் பதிலீடு செய்யப்படுகின்றன.

**144. வேறுபடுத்துக. உட்கலப்பு மற்றும் வெளிக்கலப்பு.**

| உட்கலப்பு | வெளிக்கலப்பு |
|---|---|
| ஒரே இனத்தைச் சார்ந்த உயிரினங்களை 4 முதல் 6 தலைமுறைகளுக்கு கலப்புச் செய்வது ஆகும். | விரும்பத்தக்க பண்புகளில் இரு தொடர்பற்ற விலங்குகளைக் கலப்பு செய்வது ஆகும். |
| விரும்பத்தகாத ஜீன்கள் நீக்கப்படுகின்றன. | கலப்புயிரி வீரியமானதாக இருக்கும். |
| எ.கா. ஹிஸ்ஸர்டேல் | எ.கா. கோவேறு கழுதை |

**145.விலங்குகளில் கலப்பின வீரியத்தின் விளைவுகள் யாவை ?**

**கலப்பின வீரியம்**

கலப்பினம் மூலம் உயர்தரப் பண்புகளை உற்பத்தி செய்வது.

**விளைவுகள்**

- கால்நடைகளில் பால் உற்பத்தி அதிகரித்தல்.
- கோழிகளில் முட்டை உற்பத்தி அதிகரித்தல்.
- உயர்தர இறைச்சி உற்பத்தி செய்தல்.
- வீட்டு விலங்குகளின் வளர்ச்சியை அதிகரித்தல்.

**146.உயிரூட்டச்சத்தேற்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

விரும்பத்தக்க ஊட்டச் சத்துக்கள் (வைட்டமின்கள், புரதங்கள்) நிறைந்த பயிர் தாவரங்களை உற்பத்திச் செய்யும் முறை ஆகும்.

**எடுத்துக்காட்டு**

- புரதம் நிறைந்த கோதுமை – அட்லஸ் 66
- இரும்புச்சத்து நிறைந்த அரிசி ரகம்.
- வைட்டமின் A நிறைந்த கேரட், பூசணி மற்றும் கீரை ரகங்கள்.
- லைசின் என்ற அமினோ அமிலம் நிறைந்த புரோட்டினா, சக்தி.

**147.மனோவியல் மருந்துகள் என்றால் என்ன ?**

இந்த மருந்துகள் மூளையில் செயல்பட்டு நடத்தை, உணர்வறி நிலை, சிந்திக்கும் திறன், அறிநிலை ஆகியவற்றை மாற்றியமைக்கின்றன.

**148.புகைப்பதால் வரும் நோய்கள் யவை ?**

- வாய் புற்றுநோய் • நுரையீரல் புற்றுநோய் • நுரையீரல் காசநோய் • மூச்சுக்குழல் அழற்சி

**149.உடற்பருமனுக்குக் காரணமான காரணிகள் யாவை ?**

- மரபியல் காரணிகள்
- உடல் உழைப்பின்மை
- அளவுக்கு அதிகமாக உண்ணுதல்
- நாளமில்லா சுரப்பிக் காரணிகள்

**150.வயது முதிர்ந்தோர் நீரிழிவு என்றால் என்ன ?**

வகை – 2 இன்சுலின் சாராத நீரிழிவு நோய் ஆகும்.

**151. மெட்டாஸ்டாசிஸ் என்றால் என்ன ?**

புற்று செல்கள் உடலின் தொலைவில் உள்ள பாகங்களுக்கு இடம் பெயர்ந்து புதிய செல்களை அழிக்கின்றன. இந்நிகழ்வு மெட்டாஸ்டாசிஸ் எனப்படும்.

**152.இன்சுலின் குறைபாடு எவ்வாறு ஏற்படுகிறது.**

- கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் அழிவதால்
- சரியான அளவு இன்சுலின் சுரக்காமல் இருப்பதால் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிக்கிறது.

**153.HIV பரவக்கூடிய பல்வேறு வழிகள் யாவை ?**

- பாதிக்கப்பட்டவருடன் உடலுறவு கொள்ளுதல்.
- நோய்த் தொற்று ஊசிகள் பயன்படுத்துவதால் பரவுகிறது.
- நோய்த் தொற்று உள்ள இரத்தம் பெறுவதன் மூலம் பரவுகிறது.
- பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து சேய்க்கு பரவுகிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**154.புற்று செல் சாதாரண செல்லிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ?**

| புற்று செல் | சாதாரண செல் |
|---|---|
| கட்டுபாடு இல்லாமல் செல் பிரிதல் | கட்டுப்பாடு உடைய செல் பிரிதல் |
| அருகிலுள்ள திசுக்களில் கட்டிகளை உருவாக்கி திசுக்களை அழிக்கிறது | அருகிலுள்ள திசுக்களை அழிப்பதில்லை. |
| இயல்பான செல் பிரிதலை மேற்கொள்கிறது. | இயல்பான செல் பிரிதலை மேற்கொள்வதில்லை. |

**155.உடற்பருமன் உள்ளவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு பரிந்துரைப்பதன் அவசியம் என்ன ?**

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கரோனரி இதயநோய் மற்றும் கீல்வாதம் வராமல் தடுக்க முடியும்.

**156.இதயநோய்கள் ஏற்படுவதைத் தடுக்க மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கூறுக.**

- குறைவான கலோரி கொண்ட உணவு உட்கொள்ளுதல்.
- நார்ச்சத்து மிக்க உணவுகள் (பழங்கள், காய்கறிகள்) அதிக அளவில் எடுத்துக் கொள்ளுதல்.
- நாள்தோறும் உடற்பயிற்சி செய்தல்.
- ஆல்கஹால் பருகுதல், புகைபிடித்தல் தவிர்த்தல் வேண்டும்.

**157.மரங்கள் வெட்டப்படுவதால் உண்டாகும் விளைவுகள் யாவை ?**

- பெருவெள்ளம்
- வறட்சி
- மண்ணரிப்பு
- பரவநிலைகளில் மாற்றம்

**158.வனஉயிரினங்களின் வாழிடம் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் யாவை ?**

- விலங்கினங்கள் அழிந்தும், அழியக்கூடிய நிலையிலும் உள்ளன.
- விலங்கினங்கள் நீர் மற்றும் உணவு தேவைக்காக மனிதன் வாழிடங்களுக்கு வருகிறது.

Padasalai

**159.மண்ணரிப்பிற்கான காரணிகள் யாவை ?**

- பெருவெள்ளம்
- நிலச்சரிவு
- கால்நடைகளின் அதிக மேய்ச்சல்
- மனிதனின் நடவடிக்கைகள்

**160.புதைபடிவ எரிபொருள்களை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும் ?**

- அதிகமாகப் பயன்படுத்துவதால் விரைவில் தீர்ந்து போகக்கூடிய நிலையில் உள்ளன.
- இவை உற்பத்தி ஆவதற்கு நீண்ட காலம் ஆகும்.

**161. சூரிய ஆற்றல் மூலம் எவ்வாறு ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் எனப்படுகிறது ?**
**(மரபுசார் ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மரபுசாரா ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள் யாவை ?)**

- சூரிய ஆற்றல் (மரபுசாரா ஆற்றல்) அதிக அளவில் கிடைக்கக் கூடியது.
- புதுப்பித்துக் கொள்ளக் கூடியது.
- மிகக்குறைந்த செலவில் ஆற்றலை பெற முடியும்.

**162.மின்னணுக் கழிவுகள் எவ்வாறு உற்பத்தியாகின்றன ?**

பயன்படுத்த முடியாத, பழைய, மின்சார மற்றும் மின்னணு சாதனங்களே மின்னணுக் கழிவுகள் எனப்படும்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

**163.மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவங்கள் யாவை ?**

- நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கப் பயன்படுகிறது.
- மண் அரிப்பைத் தடுக்கிறது.
- நீர் தேவைகளை சமாளிக்கிறது.
- நிலத்தடி நீர் மாசடைவதில்லை எனவே குடிநீராக பயன்படுத்த முடியும்.

**164.உயிரி வாயுவை பயன்படுத்துவதன் நன்மைகள் யாவை ?**

- குறைந்த மாசை உண்டாக்குகின்றன.
- உயிரியக் கழிவுகள் மற்றும் கழிவுப்பொருட்கள் சிதைவடைய செய்ய மிகச்சிறந்த வழியாகும்.
- சிறந்த உரமாக பயன்படுத்தலாம்.
- பசுமை இல்ல வாயுக்கள் வெளியேறும் அளவு குறைக்கிறது.

**165.கழிவுநீர் சுற்றுச்சுழலில் ஏற்படுத்தும் விளைவுகள் யாவை ?**

- விவசாய நிலங்களை அசுத்தம் செய்கிறது.
- சுற்றுச்சூழல் சீர்கேடு அடைகிறது.

KPU

**166.காடழிப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை ?**

- பெருவெள்ளம்
- வறட்சி
- மண்ணரிப்பு
- பருவ நிலைகளில் மாற்றம்

**167.மண்ணரிப்பை நீவிர் எவ்வாறு தடுப்பீர் ?**

- மரங்களை நடுதல்
- கால்நடை மேய்ச்சலைக் கட்டுப்படுத்துதல்.
- மண்வள மேலாண்மை மேம்படுத்துதல்.
- மலைகளில் நிலத்தை சமப்படுத்துதல்.

Padasalai

**168.வனங்களை மேலாண்மை செய்வதும், வன உயிரினங்களைப் பாதுபாப்பதும் ஏன் ஒரு சவாலான பணியாகக் கருதப்படுகிறது ?**

மனித ஆக்கிரமிப்பின் காரணமாக வன உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

**காரணங்கள்**

- மக்களிடம் விழிப்புணர்வு இல்லை
- நீர் பற்றாக்குறை
- வேட்டையாடுதல்
- மரங்களை வெட்டுதல்

**169.ஸ்கிராச்சு ( SCRATCH ) என்றால் என்ன ?**

- அசைவூட்டல்களையும், கேலிச் சித்திரங்களையும், விளையாட்டுகளையும் எளிதில் உருவாக்கப் பயன்படும் ஒரு மென்பொருள்.
- இது ஒரு காட்சி நிரல் மொழி ஆகும்.
- எம்.ஐ.டி பல்கலைத் தொழில்நுட்ப ஆய்வகம் எளிதாக கற்கும் வண்ணம் வடிவமைத்து உள்ளது.

**170.திருத்தி ( EDITOR ) குறித்தும் அதன் வகைகள் குறித்தும் எழுதுக.**

நிரல்களையும் (Script) ஸ்பிரைட் (Sprite) படங்களையும் நாம் மாற்ற முடியும்.

**வகைகள்**

- Script Area
- Block Menu
- Block Palatte

KPU


**171. மேடை ( STAGE ) என்றால் என்ன ?**

- Scratch சாளரத்தை திறக்கும்போது கிடைக்கும் பின்னணி.
- பின்னணி நிறம் வெள்ளையாக இருக்கும்.
- தேவை எனில் நிறம் மாற்றலாம்.


**172. ஸ்பிரைட்டு ( SPRITE ) என்றால் என்ன ?**

- Scratch சாளரத்தில் பின்னணிக்கு மேல் உள்ள கணினி மாந்தர்கள் ஸ்பிரைட்டுகள் எனப்படும்.
- இதில் ஒரு பூனை ஸ்பிரைட்டாக காட்சி அளிக்கும்.
- தேவை எனில் மாற்றலாம்.

**173. ஒரு ஆக்ஸிஸோமின் படம் வரைந்து பாகங்களைக் குறி ?**




**174. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் A, B, C மற்றும் D ஆகிய பாகங்களை அடையாளம் காணவும் ?**




A – எக்ஸைன்

B – இன்டைன்

C – உற்பத்தி செல்

D – உடல் உட்கரு

Padasalai



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com